**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

CC.No.178/2021

அ.சா.4 க்கு திரு.ராஜசேகர் த/பெ அன்னாவி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 30.07.2026.ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>அ.சா.4–திரு.ராஜசேகர் த/பெ அன்னாவி</u>**

**<u>1, 2 எதிரிகள் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கின் புகார்தாரர் , புலன் விசாரணை அதிகாரி நான் தான் என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லபடும் இடம் ரயில்வே கேட்டிற்கு வடபுறமா, தென்புறமா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லபடும் இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான் அகாலநேரம் என்பதால் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தினாலும் விசாரிக்கவில்லை.

2. ரோந்து சென்ற நேரம் அதிகாலை என்று மட்டும் சொல்லிவிட்டு மணி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ரகசிய தகவல் எந்த வழி மார்க்கமாக கிடைத்தது என்றால் வெளியில் சொல்லமுடியாது. ரோந்துக்கு செல்லும் கிராம பட்டா புத்தக்த்தில் குறிப்பிட வேண்டும்எ ன்றால் மணல் திருட்டு சம்பந்தமாகத்தான் சென்றோம். காவலர்களுக்கு கடவூச்சீட்டு வழங்கினேனா என்றால் என்னுடன் வந்தால் தேவையில்லை.

3. கைப்பற்றுதல் மகஜர் எந்த வழக்கிற்காக தயார்செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் காவல் நிலையம் வந்த பிறகு தான் வழக்கு எண் கொடுப்போம். ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து யாரால் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது என்றால் என்னால் போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமுலம் தயார் செய்யவில்லைவழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 1/2 மணல் எங்கு வைத்து எதன் மூலமாக எடுத்து'சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. மாட்டுவண்டி யாருடையது என்று விசாரணை செய்து கைப்பற்றவில்லை என்றால் சரிதான் எதிரி தன் ஒப்புதல் வாக்குமூலத்தில் மாட்டு வண்டி மூலம்

ஏற்றி வந்து குறிப்பிட்டார் மாட்டு வண்டி வந்தவர் பெயர் குறிப்பிடவில்லை. காவிரி ஆற்றில் எந்த இடத்தில் மணல் அள்ளியதாக முதல் தகவல் அறிக்கை, மற்றும் இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு அரசுக்கு இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

5. எதிரிகளை சரிவர விசாரணை செய்யவில்லைஎன்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி கடைகள் மிகுதியான பகுதிஎன்றால் சரியல்ல அதிகாலை நேரமாகும். அதிகாலை நேரத்தில் பேருந்திற்காக, ரயிலுக்காகவும் மக்கள் வருவார்கள் என்றால் சரியல்ல. அது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி வழக்கிற்காக தனிப்பட்ட நபர்களை சாட்சியாக சேர்க்கவில்லைஎன்றால் சரியல்ல. இந்த வழக்கு புள்ளிவிவரக்கணக்கிற்காக பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.